**SC.No. 26/2023**
**நாள். 29.07.2026**
**அ.சா. 1 –** பால்செல்வம்
<u>(எதிரிகள் ஆஜர்)</u>

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –**

இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அந்த அழைப்பாணையை கையெழுத்து 03.07.2026 அன்று செய்து வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அழைப்பாணையிலுள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் எ.சா.ஆ.1. 25.02.2021ம் தேதி நான் தொண்டி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் நான் ரேகை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ள புகார் நான் கொடுத்த புகார் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் பால்கண்ணன் இறக்கும்போது என்ன வயது என்றால் 28 இருக்கும். என் மகன் சௌதி அரேபியாவிற்கு எந்த வருடம் சென்றார் என்றால் ஞாபகமில்லை. சௌதி அரேபியாவில் எங்கள் ஊரைச் சேர்ந்த பலநபர்கள் மீன்பிடி தொழிலுக்காக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சௌதி அரேபியாவில் மீன்பிடி தடைகாலம் இருக்கும்போது எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் இந்தியாவிற்கு வந்துவிடுவார்கள் என்றால் எல்லோரும் வரமாட்டார்கள். எங்கள் ஊரில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 1000. எங்கள் ஊரிலுள்ள அனைத்து குடும்பங்களும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2014ம் ஆண்டு எங்கள் ஊரைச் சேர்ந்த பட்டாணி என்பவர் என் மகன் மீது தொண்டி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. எங்கள் ஊரில் நாகராஜ் என ஒரு நபர் உள்ளார் என்றால் 2,3 நபர்கள் அந்த பெயரில் உள்ளார்கள். ஒரு நாகராஜுக்கு தங்கராணி என்ற மகள் உள்ளார் என்றால் சரிதான். என் மகன் கொலை செய்யப்படுவதற்கு முன்பு மேற்படி தங்கராணியை என் மகன் பாலியல் சீண்டல் செய்தது சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்து பேசி தீர்த்து வைத்தார்கள் என்றால் இல்லை. அதே போல் மதியழகன் மனைவி பண்டுவராணி என்பவரது வீட்டிற்குள் நுழைந்து தாலிச்செயினை அறுத்துவிட்டதாக என் மகனை அவரது வீட்டில் கட்டி வைத்து சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்து பேசி தீர்த்து வைத்தார்கள் என்றால் இல்லை. அழகுமுனீஸ்வரன் மனைவி

நாகலெட்சுமி என்பவர் குளிக்கும் வீடியோவை அழகுமுனீஸ்வரனுக்கு அவரது மனைவி அனுப்பியதை அழகு முனீஸ்வரனுக்கு தெரியாமல் என் மகன் அவரது செல்போனிலிருந்து திருடி சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு பிரச்சனை ஆகிவிட்டது என்றால் சரியல்ல. எங்கள் ஊரைச் சேர்ந்த ஐயப்பன் மனைவி லெட்சுமி யுடன் வெளிநாட்டிலிருந்து தொடர்பு கொண்டதாகவும் அதனால் ஊரில் பேசி முடித்தார்கள் என்றால் சரியல்ல. ஐயப்பன் என் சித்தப்பா மகன் தம்பி. எனக்கும் எங்கள் ஊரைச்சேர்ந்த முத்தப்பா, உடையநாச்சி ஆகியோர்களும் இடப்பிரச்சனை இருந்து அந்த பிரச்சனையின்போது என் மகன் அவர்களை தாக்கிவிட்டதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மகன் இறப்பதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பாக என் மகனுக்கு மலைரதிக்கும் திருமணம் நடந்தது என்றால் ஒன்றரை வருடங்கள் இருக்கும். என் மகனுக்கும் மலைரதிக்கம் குழந்தை இல்லை என்றால் சரிதான். என் மகனுக்கும் வேறு சில பெண்களுக்கும் பிரச்சனை இருந்ததால் என் மகனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. எனக்கும் என் மகனுக்கும் ஊரில் பல நபர்களும் பல்வேறு பிரச்சனைகள் இருந்தது என்றும் அதனால் அந்த நபர்களுக்கும் எங்களுக்கும் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கும்போது 21.02.2021ம் தேதி இரவு 9 மணிக்கு வெளியே சென்ற எனது மகனை காணவில்லை என புகார் கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாருக்கு போலீசார் ரசீது கொடுத்தார்கள் என சொல்லியுள்ளேன் என்றும் அந்த ரசீதை போலீசார் விசாரிக்கும் போது கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. என் மகனை தேடி பார்க்க போலீஸ் சொன்னதால் நான் எல்லா இடங்களிலும் தேடி பார்த்தேன். எங்கு எங்கு தேடி பார்த்தேன் என்றால் இராமநாதபுரத்திலிருந்து வேளாங்கண்ணி வரை தேடி பார்த்தேன். அந்த 3 நாட்களிலும் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்பதால் தான் 25.02.2021ம் தேதி மீண்டும் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 25.02.2021ம் தேதி கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை நான் கொடுக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த புகாரிலுள்ள கைரேகை என்னுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கண்பார்வை குறைவு என்பதால் கை ரேகை வைத்தேன் என ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளது பொய் என்றால் சரியல்ல. அதற்கு பின்னால் 4

மாதங்கள் வரை என் மகனை பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். அந்த 4 மாதங்கள் வரை காவல்நிலையம் சென்று நான் கொடுத்த புகார் மனு சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தேன். என் மகன் காணாமல் போனதற்கு பிறகு எவ்வளவு காலம் கழித்து ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு மாதம் இருக்கும். ஆட்கொணர்வு மனுவின் எண் தெரியுமா என்றால் தெரியாது. ஆட்கொணர்வு மனுவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தொண்டி போலீசாருக்கு ஒரு உத்தரவு போட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு பற்றியோ அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றியோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்த பிறகு SP Office ல் இருந்து என்னை விசாரித்தார்கள். SP Office ல் என்னை விசாரித்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து என்னை தொண்டி காவல்நிலையத்திற்கு வரச் சொன்னார்கள் என்றால் SP Office ல் இருந்து இரண்டு நாட்களில் என் மகனை கண்டுபிடித்த தந்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். SP Office ல் இருந்து விசாரித்த பின்னர் இரண்டு நாட்கள் கழித்து தொண்டி போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் SP Office ல் இருந்து போலீசார் வந்து விசாரித்தார்கள். அதன் பிறகு ஒரு நாள் கழித்து தான் தொண்டி போலீசார் விசாரித்தார்கள். தொண்டி போலீசார் என்னை விசாரிக்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 12.00–1.00 மணி இருக்கும். திருவெற்றியூருக்கு எந்த திசையில் முனியய்யா கோவில் உள்ளது என்றால் தெற்கு திசையில். முனியய்யா கோவில் காட்டுப்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். முனியய்யா கோவிலுக்கும் என் மகன் புதைக்கப்பட்டதாக சொல்லி தோண்டப்பட்ட இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ. தோண்டப்பட்ட இடத்திற்கு அருகில் கருங்குடி என்ற ஊர் உள்ளது என்றால் இல்லை. என் மகன் புதைக்கப்பட்டதாக சொல்லும் இடத்தை சுற்றிலும் விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த விவசாய நிலங்களில் விவசாயம் பார்த்துக்கொண்டவர்கள் இருந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. புதைக்கப்பட்ட இடத்திற்கு அருகில் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு திருவாடனை செல்லும் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டிலிருந்து திருவெற்றியூருக்கும் செல்லலாம். அந்த ரோடு அந்த

பகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் எப்போதும் கார், பைக் போய் வந்து கொண்டிருக்கும் என்றால் சரிதான். என் மகன் புதைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு நான் மற்றும் காவல் ஆய்வாளர் உள்ளிட்ட காவலர்கள் செல்லும்பொழுது அந்த வழியாக சென்ற மக்களும் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்களும் கூடிவிட்டார்கள் என்றால் 1 கி.மீ வரை யாரும் வரக்கூடாது என போலீசார் நிறுத்திவிட்டார்கள். முனியய்யா கோவிலிலும் பூசாரி உள்ளிட்ட மக்கள் இருந்தார்கள் என்றால் இல்லை. நான் போலீஸ் ஜீப்பில் என் மகன் புதைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அந்த போலீஸ் ஜீப்பில் என்னுடன் காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவலர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். நான் புதைக்கப்பட்ட இடத்திற்க செல்வதற்கு முன்பாகவே அந்த இடத்தில் தாசில்தார், மருத்துவர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்கள் அந்த இடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர், கதிரவனும், ஜெயபாலும் என் மகனை வெட்டி கொன்றுவிட்டதாக சொன்னார் என போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புதைக்கப்பட்ட இடத்தை யார் தோண்டினார்கள் என்றால் 2 நபர்கள் தோண்டினார்கள். அவர்களை போலீசார் அழைத்து வந்தார்கள். அவர்களின் பெயர், ஊர் தெரியாது. நான் கொடுத்த புகாரில் என் மகன் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது என்ன கலரில் என்ன உடை அணிந்திருந்தார் என சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் என்னென்ன நகைகள் அணிந்திருந்தார் என சொல்லவில்லை என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போது என் மகன் என்னென்ன நகைகள் எத்தனை பவுனில் அணிந்திருந்தார் என்றோ நகைகளின் அமைப்பு பற்றியோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும் என் மனைவியும் முதல் விசாரணையில் சொன்னபடி சொன்ன தேதி, நேரத்தில் என் மகன் புதைக்கப்பட்டு தோண்டியதாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றால் நான் சென்றேன். என் மனைவி வரவில்லை. எலும்புகூடாக இருந்த உடம்பில் என் மகன் அணிந்திருந்த உடைகள் இருந்தது என முதல் விசாரணையில் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதே போல் என் மகன் வெள்ளை கலர் கட்டம் போட்ட கைலி மற்றும் Blue color பூப்போட்ட சட்டை அணிந்திருந்ததும் பொய் என்றால் சரியல்ல. தோண்டிய பிறகு நான் போலீசாருடன் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. தோண்டிய பிறகு நான்

வீட்டிற்கு சென்ற பிறகு எத்தனை நாள்கள் கழித்து போலீசார் மீண்டும் என்னை அழைத்தார்கள் என்றால் 2 நாள்கள். போலீசார் என்னை விசாரித்தபோது என் மகன் 2 மோதிரங்கள் அணிந்திருந்தான் என்று சொல்லியுள்ளேன் ஆனால் அந்த மோதிரங்கள் எத்தனை பவுன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது 6ம் எதிரி சிவகாமி காவல்நிலையத்தில் இருந்தார் என முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் 6ம் எதிரி சிவகாமியை பார்த்ததற்கு முன்பு பார்த்ததில்லை என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் அடையாள அணி வகுப்பு ஏதும் நடத்தவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரி சிவகாமியை காவல்நிலையத்தில் வைத்து பார்த்ததற்கு பிறகு 3 நாட்கள் கழித்து நான் மட்டும் தான் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். 3 நாட்கள் கழித்து காவல்நிலையத்திற்கு சென்றபோது 3 முதல் 5 எதிரிகளான பால்பாண்டி, சச்சின், லெட்சுமணன் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என முதல் விசாரணையில் சொன்னது போல் காவல் ஆய்வாளர் என்னை மீண்டும் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் அணிந்திருந்த செயின் சம்பவத்திற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. செயினும், டாலரும் ஒரே நேரத்தில் செய்யப்பட்டது என்றால் இல்லை. செயின் மற்றும் டாலர் இரண்டையும் காவல்நிலையத்தில் வைத்து போலீசார் காட்டவில்லை என்றும், பின்னிட்டு நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு 10 நாட்கள் கழித்து போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி போன போது நான் மட்டும் தான் சென்றேன் என்றால் சரிதான். அப்பொழுது நான் காவல்நிலையத்தில் வைத்து செயின் டாலரை அடையாளம் காட்டியபோது காவல்நிலையத்தில் வேறு ஆட்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அப்பொழுது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. நான் சொன்னது போல் 10 நாட்கள் கழித்து போலீசார் காவல்நிலையத்திற்கு வரச்சொல்லவில்லை என்றும் டாலர் செயினை காட்டி அடையாளம் காட்ட சொன்னார் என்றும் நான் அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல. காணாமல் போன இரண்டு சக்கர வாகனத்திற்கு ஆர்சிபுக் என் மகன் பெயரில் இருந்தது என்றால் சரிதான். அந்த ஆர்சிபுக்கை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. இருசக்கர வாகனம் எனது மகனுக்கு சொந்தமானது அல்ல என்றால்

சரியல்ல. ஏற்கனவே நான் முதல் விசாரணையில் எதிரிகள் 7 பேரும் சேர்ந்து என் மகனை கொன்றுவிட்டார்கள் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்னது போல் ரெட்டை மீன் பொறித்த மோதிரம் ஒன்றையும், நங்கூரம் பதித்த மோதிரம் ஒன்றையும் போலீசார் என்னிடம் காட்டவில்லை என்றால் சரியல்ல. என் மகன் புதைக்கப்பட்ட இடத்திற்கும் எங்கள் ஊருக்கம் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 7 கி.மீ. புதைக்கப்பட்ட இடத்தில் நான் போய் பார்த்த எலும்புகள் என் மகனுடையது இல்லை என்றால் சரியல்ல. புதைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தை சுற்றி பக்கத்து ஊர் சுடுகாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. பக்கத்து ஊர் சுடுகாடுகள் உள்ளது என்றும் அந்த சுடுகாட்டில் புதைக்கப்பட்ட ஏதோ ஒரு பிணத்தின் எலும்புக்கூட்டை போலீசார் காண்பித்தார் என்றால் சரியல்ல. அந்த எலும்புக்கூட்டில் நான் சொல்லும் ஆடைகள் இல்லை என்றால் சரியல்ல. நான் பார்த்ததாக சொல்லும் ஆடைகளில் ரத்தக்கறைகள் இருந்ததா என்றால் தெரியாது. ஆனால் ஆடைகள் கறைகளாக இருந்தது. அந்த ஆடைகள் இத்துப்போய் செதில் செதிலாக இருந்தது என்றால் சரியல்ல. என் மகனுக்கும், எனக்கும் எங்கள் ஊரில் பல எதிரிகள் உண்டு என்றும், அந்த எதிரிகள் என் மகனை கூட்டிக்கொண்டு போய் என்ன செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றும், போலீசாருக்கு இருந்த அழுத்தத்தின் பேரில் இந்த எதிரிகளை கைது செய்து வழக்கில் சேர்த்துவிட்டார்கள் என்றும் அதன் பிறகு போலீசார் சொல்லிக்கொடுத்தப்படி நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**SC.No. 26/2023**
**நாள். 29.07.2026**
**அ.சா. 2 – இதயகனி**
<u>( எதிரிகள் ஆஜர்)</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –**

என் மகன் வெளிநாட்டில் எத்தனை வருடம் இருந்தார் என்றால் 10 வருடங்களுக்கு மேலாக இருந்தார். சாட்சி கணேசன் எந்த ஊர் காரர் என்றால் முள்ளிமுனை. கணேசனுக்கும், என் கணவருக்கும் என்ன உறவு முறை என்றால் உறவு இல்லை. என் மருமகள் மலைரதிக்கு குழந்தை இல்லை என்றால் சரிதான். என் மகன் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பாக திருமணம் ஆனது என்றால் 3 வருடங்கள் இருக்கும். என் மருமகளுக்கு குழந்தை இல்லாதது சம்மந்தமாக எங்களுக்கும், என் மருமகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக என் மருமகள் மலைரதி பெற்றோர் சகோதரருக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் உள்ள பல நபர்களுடன் என் மகன் பிரச்சனை செய்து என் மகனுக்கும் அந்த நபர்களுக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. யாருடனும் என் மகனுக்கு முன்விரோதம் கிடையாது. என் மகன் எங்கள் வீட்டை விட்டு கிளம்பி செல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 9 மணி. என் மகன் எங்கே போகிறேன் என என்னிடமோ என் கணவரிடமோ சொல்லிவிட்டு செல்லவில்லை என்றால் சரியல்ல. மணக்குடி செல்வதாக சொன்னான். போலீசார் என்னை விசாரிக்கும்போது என் மகன் 2 மோதிரங்கள் அணிந்திருந்ததாகவும், ஒரு மோதிரத்தில் நங்கூரமும், மற்றொரு மோதிரத்தில் மீனும் பொறிக்கப்பட்டிருந்தது என சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு சென்று நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என் கணவர் புகார் கொடுக்க போகும் போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு வெளியே இருந்தேன். என் கணவர் முதலில் சென்றபோது ஒருபுகாரும், இரண்டாவது முறை சென்ற போது ஒரு புகாரும் கொடுத்தார் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் விசாரணையின்போது முதலில் புகார் கொடுத்தபோது தேடி பார்க்க சொன்னார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு 4 மாதமாக என் மகன்

எங்கிருக்கிறான் என்ற விவரம் எங்களுக்கு தெரியவில்லை என்றால் சரிதான். 4 மாதங்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தபோது நான், என் கணவர் , மருமகள் மலைரதி, மகள் ரவீனா ஆகியோர்கள் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மருமகள் மலைரதிக்கு என் மகன் இறந்த 4 மாதத்திலேயே மறு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என் மகன் இறந்தது சம்மந்தமாக என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.